மாரி  மழை தூவுறது மஞ்சள் வெயில் காய்கிறது
ஆரிராரோ பாடிய வாய் ஆந்தரித்து மாய்கிறது
......இசை....

ஓடிவரும் பிள்ளை ஓடிவரும் என்று ஊர்முழுதும் இங்கே தேடுறது
........இசை .....
மாரி  மழை தூவுறது மஞ்சள் வெயில் காய்கிறது
ஆரிராரோ பாடிய வாய் ஆந்தரித்து மாய்கிறது
ஓடிவரும் பிள்ளை ஓடிவரும் என்று ஊர்முழுதும் இங்கே தேடுறது
ஓசையற்ற வாசலிலே கூடிநிற்கும் வேளையிலே
ஓலமிட்டு ஓர் பறவை பாடுறது
மாரி  மழை தூவுறது மஞ்சள் வெயில் காய்கிறது
ஆரிராரோ பாடிய வாய் ஆந்தரித்து மாய்கிறது

இசை

கல்லறைகள் வரிசை காண கண்ணிரெண்டும் கசியுதே
கார்த்திகையின்  பூக்களினை பார்க்க முகம் எரியுதே ..
பல்லவியை மீறி எந்த பாட்டும் வர மறுக்குதே
பாரமொன்று ஏறி நின்று ஈர நெஞ்சை இருக்குதே
மண்ணுக்குள் தொட்டிலில் மாணிக்க கட்டிலில்
மாதவ செல்வங்கள் தூக்குறார்
எங்கள் கண்ணுக்குள் நின்றவர் நெஞ்சுக்குள் வெண்றுமே
காவிய நாயகர் ஆகிறார்
நேரமாகுதே அவர் நினைவு சூழுதே
தீபமேற்றும் நேரமாக தேகமூழுதே ஐயோ தீயில் வேகுதே

இசை

தாய் நிலத்தை காதல் செய்து தலி  கட்டி கொண்டவர்
தலைமகனை நெஞ்சினிலே தங்கி நிற்க சொன்னவர்
வாய்திறந்து நாளை தமிழ் ஈழமென பாடினார்
வந்த பகை வென்ற பின்னர் இங்கு வந்து தூங்கினார்
கல்லறை விட்டுமே கண்களை தொட்டுமே வந்ததுமே புன்னகை சிந்துறார்
அவர் வாசலில் ஏற்றிடும் தீபங்கள் பார்த்துமே
வாயினில் என்னவோ கூறுறார்
நேரமாகுதே அவர் நினைவு சூழுதே
தீபமேற்றும் நேரமாக தேகமூழுதே ஐயோ தீயில் வேகுதே

மாரி  மழை தூவுறது மஞ்சள் வெயில் காய்கிறது
ஆரிராரோ பாடிய வாய் ஆந்தரித்து மாய்கிறது
ஓடிவரும் பிள்ளை ஓடிவரும் என்று ஊர்முழுதும் இங்கே தேடுறது
ஓசையற்ற வாசலிலே கூடிநிற்கும் வேளையிலே
ஓலமிட்டு ஓர் பறவை பாடுறது
மாரி  மழை தூவுறது மஞ்சள் வெயில் காய்கிறது
ஆரிராரோ பாடிய வாய் ஆந்தரித்து மாய்கிறது